# இருவர் தவறு

எனக்கு ஐந்தாறு மாதங்கள் வெளியூர் வாசம்; உத்தியோக விஷயந்தான். என் மனைவியை அழைத்துச் செல்ல முடியுமோ என்று யோசித்தேன். அவளே முடிவுகாட்டினாள். "எதற்கு நான்? என் தொல்லையின்றி இருங்களேன், பாவம்!" என்றனள். அவளுடைய அருமை எனக்குத் தெரிய வேண்டும் என்பதுதான் அந்தரங்கம்!

எனக்கு ஓர் அறை கிடைத்தது (குடி இருப்பதற்கு!) அதில் புகல் அடைந்தேன். நான் குடிபுகுந்த சற்று நேரத்திற்குள், ஒரு சிறு பிள்ளை உள்ளே வந்து எட்டிப் பார்த்துவிட்டு ஓடிப்போனான். அவனையே கருவியாக்கிக்கொண்டு வீட்டுக்காரருடன் தோழமைகொள்ள விழைந்தேன்.

"என்ன சார்? என்ன ஓட்டம் ஓடுகிறான்!" என்று சுவாமிநாதனை விளித்தேன்.

அவர் சிரிக்காமலே, "இப்படி ஒரு பிறவி!" என்றார்.

'பிறவி என்றால்? பையன் கிறுக்கனா? மந்தியா? போக்கிரியா?

சுட்டிப்பயல்தான் என்பதை விரைவில் அறிந்தேன். மீண்டும் வந்தான். அலைபாயும் விழிகளுடன், துருதுருவென்ற தன்மையுடன் நேருக்கு நேர் என்னைப் பார்த்தான். "நீங்கள் குளிக்க அவசரமில்லையா மாமா? அம்மா என்னை எண்ணெய் தேய்ச்சுக்கச் சொல்றா; நான் குளிக்கப் போகட்டுமா மாமா?" என்று கேட்டான். மழலையில்லை பேச்சிலே. வெண்கல மணியாய் ஒலித்தது குரல். எண்ணெய் நீராடப் பாடாப்படுத்தி வைத்துப் பகடையாய்ப் புரளும் குழந்தைகளைத்தான் கண்டிருக்கிறேன் - நானே கூட அப்படி இருந்தவன்தான்!

குளிப்பறை பொது; அதனால் என்னுடைய வசதியை அறியச் சொல்லியிருக்கிறாள் அவனுடைய தாய்.

நான் மகிழ்ந்து, "ஓ, குளியேன்! நான் ரயிலில் வந்தவனேன்னோ! பெட்டி பேழைகளை சரிப்படுத்திக்கொண்டு குளிக்கிறேன்!" என்று தெரிவித்தேன்.

பையன் போனான். திரும்பி வந்தான். "அம்மாவுக்கு இன்னும் கொஞ்சம் வேலை இருக்கு. நீங்க வேணா குளிக்கலாம்னு அம்மா சொன்னா!" என்றான்.

"ஓ, பேஷாய்! ரயிலில் வந்த வேதனை, வேலை ஓடாது, குளிக்காமல்!" என்று கிளம்பிப் போனேன். பையன் ரசித்தானா, அவனுடைய தந்தை கவனித்தாரா, தாய் செவிமடுத்தாளா என்று கவனிக்காமல், என் சகஜ சுபாவத்தை விளம்பும் முறையில் பேசினேன்; வேறு என்ன பேச முடியும் இப்பொழுது?

இதமான வெந்நீரில் ஸ்நானம் பண்ணிவிட்டு வந்ததும் சுவாமிநாதனிடம் சொன்னேன். "இன்று ரயில் அழுக்காயிற்றே என்று வெந்நீரில் குளித்தேன். இனிமேல் நான் பச்சை ஜலம் இறைத்துக் குளித்துக்கொள்வேன்" என்றேன்; சற்று உரக்கவே சொன்னேன். அப்பொழுது ஒரு பெண்ணின் முகம் என்னை எட்டிப் பார்த்துவிட்டு மறைந்தது. மறுகணம் அந்த முகத்திற்குடையாள் தன் முழுத் தோற்றத்துடன் என் எதிரில் வந்துவிட்டாள்.

கணவரைப் பார்த்துக்கொண்டே, "ஊர்விட்டு ஊர் வந்திருக்கிறாரே - ஒரு வாளி வெந்நீர் பிரமாதமா? பச்சை ஜலம் வேண்டாம்" என்றாள்.

"சரி, ரொம்ப சந்தோஷம் எனக்கு. தினம் காலையில் எட்டு எட்டரைக்கு என்று வைத்துக்கொள்ளட்டுமா?"

"அதற்கென்ன, குறித்த நேரம் என்று இருப்பது நல்லதுதான்; ஆனால் ஏறத்தாழப் போகிறது எங்களுக்கும் உண்டே! அத்தனைக் கண்டிப்பு அவசியமில்லையல்லவா?" என்று அந்தப் பெண் பணிவிலும் திண்மை துலங்கப் பேசி, புன்னகை பூக்காமலே மலர்ச்சி காட்டி எனக்கு மிக மகிழ்ச்சியளித்தாள். பையனுக்குத் தாயாரைப் போலத்தான் குரல்! குரல் மணி!

"வாடாப்பா கோபி! இராகு காலத்திற்கு முன்னே எண்ணெய் வைக்கிறேன்!" என்று அவள் பையனை அழைத்ததைச் செவியுற்று நான் சிரித்துக் கொண்டேன். தாய்மை எய்தியதுமே ஒரு பெண்ணின் உள்ளம் எப்படித்தான் முதிர்ச்சியடைகிறது! இந்தப் பெண்மணி ஆகிருதியில் சற்று சிறியவள்-ஐந்தடி உயரம்தானிருப்பாள்-அதனால்தானோ என்னமோ 'ராகுகாலம்' என்று அவள் 'பாட்டி' போல பேசினது வேடிக்கையாய்ப்பட்டது!

என்னிடம் சொல்கிறாப்போல சுவாமிநாதன், "சனி, புதன் எண்ணெய்க்குளி தவறவிடமாட்டாள், பையனுக்கு!" என்றார், குற்றஞ்சாட்டும் பாவணையிலே!

"ஏன், நல்லதுதானே!" என்றேன்.

"இல்லைன்னு யார் சொன்னா? ஆனாலும் இப்படி எங்கள் வீட்டில்தான் நடக்கிறது!" என்றார் அவர் மறுபடி.

'அட, பைத்தியக்கார மனுஷா!' என்று மனதில் நினைத்தேன். எனக்கு சந்தேகம்தான் - இவர்தாம் ஒரு 'புதுப்பிறவி'யோ என்று! எண்ணெய்க் குளியினால் நன்மைகள் எத்தனையென்பதையெல்லாம், எண்ணெய் ஆட்டி எடுத்தாற்போல ஒரு வசனத்திலே தந்துவிட்டனர் நம் முன்னோர். தவறாமல் எண்ணெய் ஸ்நானம் செய்வது ஒன்றே போதும் உடல் உரம் பெற. அப்படியிருக்க.....?

சுவாமிநாதனுடன் பழகுவது சிரமம் என நினைத்தேன். ஆனால் அவர் கலகலப்பாக என்னுடன் பழகிய நேரங்கள் பல வந்து போயின. என் வரலாறு கேட்டு அறிந்தார். சில சமயம் புதிர் போட்டுப் பேசிவிட்டதாக நினைத்துச் சிரித்தார். அவர் முகத்தில் நிலவிய ஒரு பாவனை எனக்கு அவரிடம் அன்பை உண்டாக்கியது. சில சமயம் அவர்மேல் கோபமும் தோன்றும். நானும் அறிவேனே - குழந்தை வளர்ப்பு விஷயத்தில் தம்பதிகளுக்குள்ளே பூசல் உண்டாவது சகஜந்தான். பெயர் சூட்டுவதிலேயே தர்க்கம் எழும். ஆனால், இந்தத் தம்பதியிடம் நான் கண்டது ஒரு புதுவிதப் பூசல்!

அரிவைப் பருவத்து அன்னை கமலம். முதற் குழந்தை என்ற பூரிப்பும் இருக்கும். ஆசையுடன் அலுக்காமல் இரண்டு மூன்று பொழுதுகளும் நல்ல அழகான உடைகள் அணிவிப்பாள் பிள்ளைக்கு. என் மனைவி ராதை இருக்கிறாளே - பெண் குழந்தைக்குத்தான் சிங்காரங்கள் செய்ய முடியும் என்று கருதி முதல் குழந்தை பெண்ணாய்ப் பிறந்திருக்கணும் என்று சொல்லியிருக்கிறாள்! இப்போது இரண்டாவது பெண் பிறந்திருக்கிறாள்; தையல் வேலை, பூ வேலை எல்லாம் தடபுடல்! ராதையைப் போல் கமலம் நினைக்கவில்லை. பிள்ளை மட்டும் தாழ்ந்தானோ என நினைப்பவளாய், கருத்துடன் உடுப்புகள் போட்டு அழகு செய்கிறாள். இது ஒரு தப்புக் காரியம் போலப் பழிப்பார் என் நண்பர்! "எந்த அம்மாவும் இத்தனை அமர்க்களமாய் நாலு வேளை உடை மாற்றிவிடுவதில்லை!" என்று ஒரு நாள் அவர் கடுகடுத்தார்.

இதே பேச்சு சரளமாய் வந்திருந்தால்? பொருமலாயிராமல் பெருமையாய் அவர் கூறியிருப்பின்? மனைவி கமலம் கண்களிலே களிப்புக் கொழிக்க அவரைப் பார்த்திருப்பாள். சுவாமிநாதன் அடம் பேசவே, கமலம் தடம் கண் திறந்தாள். "ஹூம், நான் இப்படிச் செய்யாமல்விட்டேனோ, என்ன சொல்லுவீர்கள், தெரியாதா? அம்மாமார்கள் தங்கள் குழந்தைகளுக்கு வேளைக்கொரு வேஷம் போட்டுப் பூரிப்பார்கள் என்று சொல்லிக் கொடுப்பீர்கள். குழந்தைகள் சுத்தமாய், துப்புரவாய் இருக்க வேண்டும்; அழுக்கும் கிழிசலும் போட்டுக்கொண்டு நிற்கவிடமாட்டேன். சில தாய்மார்கள் குழந்தைகளைத் தாயில்லாத அனாதைகள் மாதிரி விட்டு வைப்பார்கள்; நான் அப்படியிருக்க முடியாது. ஈரமும் சேறும் இருந்தால்தான் உடை மாற்றணுமா? எனக்குப் புடவையைக் குறைத்துக்கொள்கிறேன், சரி தானே?" என்று கமலம் முழக்கினாள் மறுமொழி.

என் மனைவியை மிஞ்சிவிட்டாள் - கமலம். ராதை இப்பொழுதல்லவா பெண் பிறந்த பிறகு சொல்கிறாள், "எனக்கு இனி தேவை சொற்பம். இந்தப் பெண்ணுக்கு ஒரு நல்ல புருஷனைப் பிடிக்கணுமே; பணத்தில் இனி கவனம் வேணும்!" என்று! அதற்கு முன் பிறந்து நான்கு வயது நிரம்பிவிட்ட மைந்தனுக்காக தன் தேவைகளைக் குறைக்கும்

எண்ணமிருந்ததா? ஹூம், இப்பவும்தான் எந்தச் செலவைக் குறைத்தாள்? பேச்சளவில்தான் சொன்னாள்! எண்ணம் மட்டும் இருக்கிறது.

நான் வம்பன்போல சுவாமிநாதன் - கமலம் விஷயத்தில் கருத்து செலுத்தவில்லை. எனினும் உடனிருந்து பழகும் தோஷம், வேற்றானாகிய என்னை சுற்றம்போல் பிணைக்க முயன்றது.

நான் அறிந்தவரையில் இந்த சதிபதியின் கருத்து வேற்றுமை கோபியையொட்டியே இருந்தது. ஆனால் கோபியோ படுசமர்த்து. தாயைத் திணற வைக்காத பிள்ளையாக கோபி இருந்ததனால் தானோ, சுவாமிநாதன் கமலத்தைக் திணறடிக்க_ப் பார்த்தார்? கோபிக்கு அம்மாவிடம் அதிகம் சலுகையா, அப்பாவிடம் அதிகம் ஒட்டுதலையா என்று சொல்வதற்கில்லை. அவன் பேசுவதும், சிரிப்பதும், கேள்விகள் கேட்பதும், விழுந்து காயம் பட்டுக்கொண்டு அழுவதும் எங்கும் போலதான். அன்னையிடம் எத்தனை ஆதரவு பெற்றாலும், அசட்டுச் செல்லம் பெறவில்லை. கமலத்தின் கண்ணோக்கு ஒன்று போதும் அவனை மடக்குவதற்கு. இத்தகைய மனக்கட்டுப்பாடு எந்த அன்னைக்கு உண்டு? சுவாமிநாதன் ஏனோ பழித்தார்! மைந்தனுக்கு அடுத்தபடிதான் தமக்கு அவள் கருத்து வழங்குகிறாள் என்ற குறையோ? மனத்தத்துவ ஆராய்ச்சியாளர்தாம் என்னென்னவோ எழுதி வைத்திருக்கிறார்களே!

ஒரே ஒரு விஷயத்தில் கமலம் கோபியைக் கடிந்தாள், கோபித்தாள். ஏனென்றால், கோபிக்கு பிறவியோடு வந்த வித்தையின் வித்துப்போல ஒரு வழக்கம் ஏற்பட்டிருந்தது. மிருதங்கம் வாசிக்கும் பாணியில், கோபி, எந்தப் பொருள் மேல் கைப்பட்டாலும் தாளம் போட்டான். கதவு, மேஜை, புத்தகம், பாத்திரம் என்னும் பொருள்கள் எல்லாம் அவனுடைய கற்பனையில் மிருதங்கம் ஆகிவிடும். அவனையுமறியாமல் விரல்கள் மடிந்து கொள்ளும், நா ஜதி போடும், கண்கள் எங்கோ பார்க்கும், மனம் கற்பனையில் லயித்திருக்கும். சில சமயம் தலையாட்டமும் முகபாவமும் அப்படியே வித்வான் போலக் களை கட்டிப்போகும்.

"கூடாதுடா என்று சொல்கிறேனே, ஏறுகிறதா? சதா இப்படித் தாளம் போட்டால் சோற்றுக்குத் தாளம் போட வேண்டியதுதான்! கலத்திற்கு முன்னாடி உட்கார்ந்து தட்டிலேயே போட்டாகிறது தாளம்! வேறே வினை வேண்டாம்!" என்று கமலம் பல தடவை சொல்லியிருக்கிறாள். கோபிக்கு உறைக்காத மிரட்டல் இது ஒன்றுதான்!

நானும் பார்த்தேன்; எந்தத் தாயாரும் பிள்ளை படேட உத்தியோகம் செய்வதையே விரும்புகிறாள். கலைச் செல்வனாகவோ, பந்தாட்டப் புலியாகவோ, நாட்டிய மன்னனாகவோ உருவாக்க நினைப்பது கிடையாது. கமலம் மட்டும் தனிப்பிறவியா என்ன?

** ** **

ஒருநாள் மாலை உலாவி வர பூங்காவிற்குப் புறப்பட்டேன். சுவாமிநாதன் என்னைத் தொடர்ந்து வந்து சேர்ந்து கொண்டார். அவர் முகம் சாம்பிக் கிடந்தது. "நீங்கள் சொல்லுங்கள் சார், ஒரு யோசனை. எனக்கு கோபியைப் பற்றி கவலை" என்றார் அவர். "பள்ளிக்கூடத்தில் சேர்க்கலாம் என்று அவள் சொல்லுகிறாள், நான் அவளையே முதலில் வீட்டில் சொல்லித்தரச் சொல்கிறேன்" என்று தம் கருத்து வேற்றுமையைப் பற்றி சொல்ல ஆரம்பித்தவர், படிப்படியாகப் போய்க், கடைசியில், "ஏன் சார், நீங்களே சொல்லுங்கள்! யாராவது ஏதாவது சொல்வார்கள் என்ற அச்சத்துடனேயா நடந்து கொள்வது குழந்தைகள் விஷயத்தில்?" என்ற வினாவுடன் முடித்தார்.

அவர் சொன்னவற்றில் ஏதோ விளங்காத மாதிரி எனக்குப்பட்டது. சந்தேகம் கேட்டேன். "அப்புறம் வெளியூருக்குத்தான் அவனை அனுப்பப்போகிறேன், சார்; கமலம் அவனை இப்படியே வளர்த்துக்கொண்டு வந்தால் கோபியின் மனவளர்ச்சிக்குத் தடைதான்! எங்கள் வீட்டில் நடப்பது போலவா நடக்கிறது எங்கும்?" என்று அவர் மீண்டும் பேசவே நான் பொறுமையிழந்து, "பெற்றோரைப் பிரிந்து வாழும் குழந்தைக்கு மட்டும் மனவளர்ச்சி தடைப்படாதோ? குருவிக் குஞ்சு ஒன்று கூட்டிலிருந்து விழுந்துவிட்டது. அதை ஒரு நாள் கவனித்துப் போஷிக்க முடியவில்லை சார்! கூட்டிலிருந்திருந்தால் தன்னைப்போல

குருவியாகிப் பறந்து திரிந்திருக்கும்!" என்றேன் படபடப்புடன். வாய்ப்பு கிடைத்துள்ளது; வாதாடித் திருத்திவிட வேண்டாமா அவர் பிழையை?

என் படபடப்பு ஏனோ அவருக்கு வேடிக்கையாகப்பட்டுவிட்டது. "வாஸ்தவம்" என்றார் ஒரு தினுசாக.

தாக்குதல் துவங்கிய பிறகு அவருடைய முகபாவங் கண்டு தடுமாறலாமா? தொடர்ந்தேன்.

"எந்தத் தாயார் உங்கள் மனைவியைப் போல, நிதானமும் ஒழுங்குமாக, அடி, வசவு வழங்காமல் குழந்தை வளர்க்கிறாள்? பையன் திவ்வியமாக இளவரசன் போல வளர்ந்து வருகிறான். உங்கள் மனைவி அளிக்கும் பயிற்சி ரொம்ப சரியான பயிற்சி, சார்! அசட்டுக் கொஞ்சல், அநாவசியத் திட்டு எல்லாம் குற்றம் சார்! என் மனைவி எப்படி தெரியுமா? என் பிள்ளை ராமுவை 'சண்டாளப் பாவி!' என்று வைது கோபிப்பாள். 'மோஹனராமா' என்று குலாவுவாள். என்ன சார் வேண்டிக் கிடக்கு இந்தச் சீராட்டும் திட்டும், வசவும்?" என ஒரு சிரிப்புப் போர்த்தி என் சொற் சித்திரத்தை வழங்கினேன்.

என் நண்பரின் கண்களில் நீர் முத்து! "உங்களுக்குத் தெரியாது சார்?" என்று குழறினார்_. என் நெஞ்சினைக் குழப்பும் செய்தி விளம்பத் தொடங்கினார்!

"எங்கள் கோபியும் ஒரு காலத்தில் சண்டாளப் பாபியாயும், சாக்கலேட்டு டாஃபியாகவும் ர்இருந்தவன்தான் சார்!"

என் நிலையைக் கண்டு தொடர்ந்தார். "கமலமும் சொல்லுவாள். எனக்கும் பேஷாய்த் தெரியும். இளையாள் பட்டம் பொல்லாது. அதிலும் மாற்றாந்தாய்ப் பட்டம் மகா பொல்லாது. தன் சத்துருவுக்கும் அது வர வேண்டாம் என்றுதான் சொல்லியிருக்கிறாள். எனக்கு அவள் நிலை தெரியாதா என்ன? அவளை நான் குறை கூறுவது இதுதான். ஊராருக்காக, பிறத்தியாருக்காக, பயந்து கட்டுப்பட்டு, தனக்குச் சுயமாகத் தோன்றாதவைகளை வருவித்துக்கொண்டு வளர்க்க வேண்டுமா பையனை? கடமையாயிற்றே என்று செய்கிற பணிவிடை வேண்டாம். அபிமானம் வேணும். பெற்றதாய் வளர்க்கிறதற்கும், இவள் வளர்க்கிற முறைக்கும் வித்தியாசம் வந்துவிட்டதே, பாருங்களேன்!"

ஆந்தை போல விழித்தேன் நான்.

"கோபியின் அம்மா சாகும்போது அவனுக்கு வயசு மூன்றாகிவிட்டது. அம்மா ஒருத்தி இருந்தாள் என்று அவன் மனசுக்குத் தெரிந்திருந்தது. அவளைக் காணவில்லை என்றும் அறிந்தான். ஐயையோ, அந்த நாளில்தான் குழந்தை எப்படியெல்லாம் சுற்றிச் சுற்றி ஏங்கி ஏங்கிப் பார்ப்பான்! கண்களில் எத்தனை வேதனை! எப்படியோ அவனுடைய அந்தரங்கத்திற்குத் தெரிந்துவிட்டது, அம்மா வரமாட்டாள் என்று; அற்புதமாய்ச் சமாளித்துவிட்டது சார், குழந்தையுள்ளம்! அந்தக் கொஞ்ச நாள் ஊழிக்காலமாய் வளர்ந்தது."

அவர் விளக்கிக்கொண்டேயிருக்க, என் மனம் நண்பரையும், கோபியையும், கமலத்தையும் மூன்று கோணங்களில் எடைபோட்டுப் பார்த்துக்கொண்டிருந்தது.

அன்னையை இழந்த குழந்தைக்கு, தாயினும் மேலான செவிலி கிடைத்திருக்கிறாள். இதுதான் நான் கண்ட உண்மை.

"கோபிக்கு சித்தியா சார், கமலம்?" நான் கேட்டு வைத்தேன்.

என் நண்பரின் முகத்திலே ஒரு சிரிப்பு, ஒட்டகையின் உடலைப்போலக் கோணலாக நெளிந்தது. "ஆமாம், ஒரு பெண்ணுக்குச் சுவாமியாய் இருந்தேன். இன்னொரு பெண்ணுக்கு நாதனாயிருக்கிறேன்!" என்றார். இரு மனைவியர் என்னும்போதே ஒரு ஆசாமியின் முகத்திலே கூன் விழுகிறது. ராதை மட்டும் அவருடைய முக மாறுதலைப் பார்த்திருந்தாளோ.... ஆண் குலத்தைப் பழிக்க வேறொன்றும் அவளுக்கு அவசியமிராது. ஏற்கெனவே சொல்லியிருக்கிறாள். "என்ன அக்கிரமம்! பெண்ணின் ஜாதகத்திலே அங்காரகன்

வினையாக உட்கார்ந்திருந்தால், 'செவ்வாய் தோஷம்'; அதே புருஷனுக்கு இருந்தால் களத்திர யோகம்! அநீதி!" என்று பழிப்பாள்.

மனைவியை இழந்தவன் மறுமணம் புரியும் அக்கிரமம் அவளுக்குப் பொறுக்காது.

நான் இப்பொழுது நினைத்தது, மறுமணத்தினால் இளையாள் பட்டமும், சிற்றன்னைப் பட்டமும் பெறும் இளம் பெண்களைப் பற்றி. பாவம், கமலம்! அவள் நிலை எத்தனை இடர்கள் உடையது - பனிமலைப் பயணம் போல! பனி மூடிய சிகரங்களில் ஏறி வருவதற்காகப் புறப்படும் கோஷ்டிகள். எத்தனை முஸ்தீப்புகளுடன் போகிறார்களோ, அத்தனை திட்டங்கள், எச்சரிக்கைகள் கமலத்திற்கும் இருக்கத்தானே இருக்கும்? அன்னையைப்போல அன்பு செலுத்த வேணும், அதட்டித் திட்டக்கூடாது என்றுதான் நினைப்பாள். தன்னுடைய பொறுப்பு அசாதாரணம் என்று ஆதியிலேயே உணர்ந்துவிட்ட பின்பு வேறு எப்படி இருப்பது சாத்தியம்? கமலம் கோபியிடம் காட்டும் அபிமானம், உரிதோல் உடைய போலி முத்து என்று சுவாமிநாதனே குறை கூறினால், அந்தப் பேதை உய்யும் வழிதான் எது?

மனசு என்று ஒன்று இருக்கிறதே, அது ரொம்பப் பொல்லாதது. கமலம் சிற்றன்னை என்று அறிந்த பிறகு, நான் அவளைப் பற்றி எழுப்பியிருந்த உயர்ந்த எண்ணம்கூட ஒரு நாள் கவிழப்பார்த்தது! நல்ல வேளை, கடவுள் காப்பாற்றினார் என்னை.

சின்னஞ்சிறு விஷயம். மழையினால் தெருவெங்கும் சேறு. கோபி சலவை களையாத உடுப்பு கேட்டிருக்கிறான். கமலம் அணிவித்துவிட்டாள். அசுவமேத யாகத்தில் குதிரையைச் சிங்காரித்து அதனிச்சைப்படிப் போகவிட்டு சண்டையை வரவழைத்துக்கொள்வார்களாமே, அதுபோல இருக்கிறதே கமலத்தின் செய்கை என்று நினைத்தேன். தெருவுக்குப் போக ஓடினான் கோபி. நான் அவனை அருகே அழைத்து, என் பிள்ளைக்காக வாங்கியிருந்த 'வியூமாஸ்டர்'ரையும் படங்களையும் வெளியில் எடுத்து விளையாட்டுக் காட்டினேன். அன்றிரவு என்னிடம் சாமிநாதன் வந்தார். "ஏன் சார், குழந்தை கேட்டதுமே, 'ஆகா யுவராஜா கட்டளையிட்டபடியே!' என்கிற மாதிரிதானே நடந்து கொண்டாள்? சாதாரண சட்டையும், நிஜாரும்தான் போடுவேன் என்று சொல்லக்கூடாதா?" என்று அவர் கேட்டதும், ஒரு கணம் நான், 'ஆம், கோபியை இரும்புக்கை வருடுகிறது; மோதிரக்கை குட்டவில்லை. சுவாமி சொல்வது முற்றிலும் பிழையாகாது" என நினைத்துவிட்டேன். மறு கணம் தப்பிவிட்டேன்.

"நீங்கள்தான் ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா சார்? 'டேய், நாளைக்கு ஆகட்டும்' என்று பிள்ளையை நீங்கள் அதட்டாமல், மனைவியிடமே பொறுப்பு இருப்பதாக எண்ணவிடலாமா? அவள் பயப்படுவது நியாயம்" என்று விடையளித்தேன். வெறித்துப் பார்த்து அடங்கினார் அவர்!

•• •• ••

எனக்கு உணர்ச்சிகளின் ஊட்டம் அதிகமாகிவிட்டது. அழற்சியை ஒழிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் வந்தது. நான்கே நாள் விடுமுறை; எனினும் நாற்பொருள் பெற்றவன்போல அக மகிழ்ந்தேன். ஓய்வு நாளின் நற்பயன், நான் போய்ச் சேர்ந்ததுமே களை கட்டிவிட்டது!

கோபதாபம் வெளிப்படுத்துவதற்குக் குழந்தைகள் நல்ல கருவிகள்தாம். ராதை மக்கள் இருவரையும் பயன்படுத்திக்கொண்டாள். பெண்ணரசி, தாய்க்கு அழகு கூட்டும் பொம்மையாக அவள் இடுப்பில் குந்தி இருந்தது. மைந்தன் உதவினான் அன்னையின் மையலுக்கு வடிகாலாக. ராதை தன் காதலையும், அன்பையும் பிள்ளையின் பித்ரு பாசமாக மாற்றிக்காட்டினாள். அந்தக் கன்னல் மொழியிலும் கடுமை புகுத்தினாள். எனவே நான் பெற்றேன், சுவைப்பதற்கு உகந்த கற்கண்டுக்கட்டி.

"அப்பப்பா, உங்கள் பிள்ளை கேட்கிற கேள்விகள் உண்டே! யட்சன்தான்! 'அப்பா எப்போ வருவா, ஏன் ஊருக்குப் போனா?' என்று கேட்டு என் பிராணனை வாங்கிவிட்டான்! ஏதாவது வாங்கிக்கொண்டு வந்தீர்களோ இல்லையோ அவனுக்கு? ஏண்டா சாப்பாட்டுராமா? இப்போ என்ன வாயில் கொழுக்கட்டையா? போயேன் அப்பாகிட்ட! நீங்கள்தான் அவனை

ஆசையாய்க் கூப்பிடுங்களேன்! துணிமணி மேலே என்ன கவனம் இப்போ? ஆத்திற்குத்தானே வந்திருக்கிறீர்கள்? இதுகூட ஒட்டுக்குடியா? பாவம் குழந்தை காத்துக்கிடக்கு, கடிதம் வந்ததே பிடித்து!" - இப்படியெல்லாம் வார்த்தையாடி, என் மேல் குற்றப்பத்திரிகை ஒன்று பிள்ளையின் சார்பில் படித்துவிட்டு, அவனை என்னிடம் கொண்டு வந்த பாவனையில் என்னை அணுகி, பெண்ணை என்னிடம் கொடுக்கிற சாயலில் என் தோள் நெருங்கி, தாய்த்தன்மையிலே அன்புக் காதல் ஒளிர நின்றனள் என் ராதை.

என்னுடைய உற்சாகத்தில் ராதையை உசுப்பிவிடுவதற்கு நான் கமலத்தைப் பற்றித் தெரிவித்தேன். ராதை பொறாமையுடன் நாலு வார்த்தை சொன்னதையும் வாங்கிக் கட்டிக் கொண்டு மகிழ்ந்தேன். கமலத்தினிடம் என்னுடைய மதிப்பு அதிகம்தானாகிறது. 'சுவாமிநாதன் இன்னொரு மனைவியோடு வாழ்ந்தார் என்பதற்குச் சான்று கோபி. கமலம் எப்படித்தானிருக்கக்கூடாது?'. கமலத்தைப் பற்றி ஒரு சொல் புகழ்ந்தாலே பொறுக்கவில்லை ராதைக்கு.

இல்லற நிழலில் இளைப்பாறிவிட்டு என் அலுவலைப் பார்க்கப் புறப்பட்டேன். வழிநெடுக மனதில் பல இனிய சிந்தனைகள். என்னுள்ளத்திலே பதிந்துவிட்ட 'கற்கண்டு'க் காட்சியின் இனிமை தெவிட்டவில்லை. ராதை என்னைக் கண்டதும் நடந்துகொண்ட நேர்த்தி, அவளுடைய சிறு தயக்கம், பெருவாரியான மகிழ்ச்சி, அன்னையென்னும் பெருமிதத்திலே மனைவியென்னும் அடக்கம் தளர்ந்த நிலை - எல்லாம் சுவைத்தன; இனித்தன.

என் ஜாகை வந்து சேர்ந்தேன். காலை தினசரிப் பத்திரிகையில் பார்த்த ஒரு செய்தியைப்பற்றி நண்பரிடம் பேச அவா. அவரைக் காணவில்லை.

"ஊரில் இல்லையே அவர்! இன்றைக்காவது வரணும். கையகலம் நிலமிருக்கிறது கிராமத்தில். நாலு வருஷமாய்ப் போகவில்லை என்று இப்பொழுது முக்கியமாகப் போனார்; மூன்று நாளாச்சு. இந்தப் பிள்ளை கோபியானால் என்னைக் கேள்வி பாணம் போட்டுத் தொளைக்கிறான். முன்னைப்பின்னே இவனைவிட்டுவிட்டுப் போனதில்லை" என்று எனக்கு விடையளிக்கும் வகையில் கமலம் தன் கவலையை வெளியிட்டாள்.

நான் மனசுக்குள் சிரித்துக்கொண்டேன். "நான் வந்த பிறகு போயிருக்கலாமே அவர்? துணை இல்லை போல் இருக்கு உங்களுக்கும்... . . " என்று இழுத்தேன்.

"போயிருக்கவே வேண்டாம்; அவசியமே இல்லை! பிள்ளையைப் பிரிந்திருக்க முடியுமோ முடியாதோ என்று பார்த்துக்கொள்ளத் தானாகவே ஒரு பரீட்சை வைத்துக்கொண்டார் போலிருக்கு! கோபியை எங்கேயோ அனுப்பிப் படிக்க வைக்க வேண்டுமாமே! அங்கே நல்ல பயிற்சியாம்; படிப்பானாம்! இங்கே நான் இவனுடன் பட்ட அவதி தெரியணுமே! தனக்கு மனசு எப்படியிருக்கும் என்று பார்த்துக் கொண்டால் போதுமா?" என்று கமலம் அலுப்பும் சிரிப்புமாகப் பேசிவிட்டுப் போனாள்.

** ** **

நண்பர் வந்துவிட்டார்-தெருமுனையில் அவர் வருவதைக் கணக்கிட்டு கோபி ஓடோடி வந்து உள்ளே கட்டியங் கூறினான். நானும் தயாரானேன், 'அந்த' அழகுக் காட்சியைப் பிறாரிடத்தும் காண்பதற்கு! இல்லறச்சுவை நிரம்பிய காட்சியை எங்கே எத்தனை பார்த்தாலும் களிப்பு உண்டாகுமே!

கோபியின் கரம் பற்றியவாறு வாசற்படி ஏறிவந்தார் சுவாமிநாதன். எட்டிப் பார்த்துவிட்டு ஒதுங்கி நின்றாள் கமலம். என் மனைவியைக் காட்டிலும் இளம் மனைவியல்லவா? அதுவுமின்றி, அவளுக்கு சுயமாகத் தாய்மை உண்டாகாததால் அடக்கம், கூச்சம் முதலியன சற்று அதிகமாகவே இருக்கும். இரண்டு நாள் தான் பிரிவு என்றாலும் அன்பை வெளியிட்டுக் கொள்ள சங்கோஜம்.

ஐந்தாறு நிமிஷங்கள் அமைதி நிலவியது அங்கே. ஆவல் காட்டிய கோபி, கவலைப்பட்ட கமலம், வீடு திரும்பிய நண்பர் மூவரும் கலகலப்பு உண்டாக்காமலே இருந்தனர்.

சட்டென்று கமலம்தான் குரல் எழுப்பினாள். கோபியைக் கருவியாகக் கொண்டு பேசத் தொடங்கினாள்! "நன்றாய்ப் பாருடாப்பா அப்பாவை! இராப்பகல் என் பிராணனை எடுத்துவிட்டாயே! ஐயய்ய, என்ன நச்சு, கிழட்டு நச்சு! ஏண்டாப்பா இதையும் அழைத்துக்கொண்டு போகாமல் போனீர்கள் என்று ஆத்திரமாய் வந்தது எனக்கு! சதா கேள்விதான் அருமை அப்பாவைப் பற்றி பாரேன் இப்போ! என்னைப் படுத்துகிறதையும் படுத்திவிட்டு சாது மாதிரி நிற்பதைப் பாரேன்! என்ன சாமர்த்தியம் இப்பவே பிடித்து!" என்று கமலம் தன் மனத்திலிருந்ததை வெளியிட்டாள்.

மழையில் நனைந்தபடி தெருவோரமாய் நிற்கும் பசுவைப்போல கோபி சுவரோடு ஒட்டி நிற்பதைப் பார்த்தார் தந்தை. "ஏண்டாண்ணா! வா, வந்து உட்காரேன் என்னண்டை! அம்மாவை என்னவெல்லாம் கேட்டாய்? நான் வரவே மாட்டேனோன்னு பயந்து போயிட்டியாடா, ஏண்டா கண்ணூ!" என்று கை நீட்டி அழைத்தவாறே மைந்தனை அணுகி வந்தார்.

பேசும் படத்தில் கட்டியணைக்கும் காட்சிகளை வெகுவாக வெட்டிவிடுவார்கள், படத் தணிக்கையாளர்கள். அப்படியும் சில காட்சிகள் வந்துவிட்டால், படம் பார்ப்பவர்களில் சிலர் முகத்தைத் திருப்பிக்கொள்வார்கள். இந்தச் சமயம் கமலம் இரண்டு வேலைகளையும் செய்தாள்! ஆனால் இந்தக் காட்சி, பெற்ற பாசம் விளம்பும் காட்சி; இதைத் தணிக்கையாளர்கூட ஆட்சேபிக்க மாட்டார்கள்!

"முதலில் கைகால் அலம்பிக்கொண்டு வயிற்றுப்பாடு பாருங்கள்! அப்புறம் அவனுடன் ஆற அமர விளையாடலாம். எங்கே இன்றைக்கும் அவனுடைய தொணதொணப்பு என்னைவிடாதோ என்றிருந்தேன். நல்ல வேளை; அப்பாவாச்சு, பிள்ளையாச்சு; எல்லாம் சாப்பிட்டப்புறம் வைத்துக்கொள்ளுங்கள்" என்று கமலம் கடுமையாகக் கூறவே, சுவாமிநாதன், மைந்தனின் தோள்களைத் தட்டித் துழாவியபடியே அப்பால் சென்றார்.

நான் துணுக்குற்றேன். யோசித்தேன். என் நெஞ்சிலே தூய்மை குன்றக்கூடாது என்று முயன்றேன். ஆனால் என் கண்களிலே தூசி படிந்துவிட்டாற் போல வேதனை. அவலக் காட்சி கண்டாற் போன்று அயர்வு.

நெஞ்சை உருக்கும் காட்சிகள் எங்கெங்கும் பல உண்டு. பூப்போன்ற உடலிலிருந்து ஆவி பிரிந்து போய்விட்ட பச்சைக் குழந்தையைப்போல ஒரு பரிதாபம் இருக்க முடியாது என்று நினைத்திருந்தேன். ஆனால் இன்றோ, ஆசையும் அச்சமும், ஏக்கமும் அன்பும் ஒருங்கே உருவானதுபோல உணர்ச்சியும், உயிரும் நிரம்பிய ஒரு தாயில்லாக் குழந்தையை மிஞ்சின துன்பக் காட்சி உண்டோ என்று என் உள்ளம் விம்மிற்று.

**********

(சுதேசமித்திரன். மே 20, 1956)